FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318785

1. District : மாவட்டம் Chennai | PS: காவல்நிலையம் V SAC CSUI | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 4/AC/2026/CCI | Date: நாள் 06.07.2026

2. (i) Act சட்டம்: prevention of corruption | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988(Amendment) | Sections பிரிவுகள்: 7 & 8
(iii) Act சட்டம்: ACT 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.07.26 | Date from : நாள் முதல் 16.00hrs | Date to : நாள் வரை 22.30hrs.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.07.2026 | Time : நேரம் 22.45hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Greater Chennai corporation Zone V, Royapuram

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி NO:158, Basin Bridge Road Old Washermenpet. Chennai - 21

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : 18 Km approximately North. இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் Inspection Selvi. G.N. Ragavi, Cell Inspector/Revenue Inspector Velachery Chennai - 42.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. S.K. Syed Jeelani, Licence Inspector, Revenue dept zone V. 2) Tr. T. Vetrivel Assesor, Revenue dept zone V. 3) G. prasath Kumar, Sanitary Inspector, Health Dept zone V. 4) S. Babu, contractor (private individual) 36/48 Thandavarayan St, Washermanpet, Chennai-21

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Does not arise.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிணை விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in Separate Sheet enclosed herewith

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

06/07/26

06/07/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 06.07.2026 at 14.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் K. VALARMATHI
Rank நிலை INSPECTOR OF POLICE
CSUI
DVAC

Chennai, Vigilance and Anti-corruption, City Special Untit-I office containing the complaint FIR in Cr.No.4/AC/2026/CC-I Continuation (Column-12):-

காவல் ஆய்வாளர் திருமதி.K.வளர்மதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர சிறப்பு பிரிவு-1 ஆகிய என்னிடம் 03.07.2026-ம் தேதி இரவு சுமார் 22.45 மணிக்கு செல்வி.G.N.ராகவி, ஆய்வு குழு ஆய்வாளர்/குறுவட்ட வருவாய ஆய்வாளர், வேளச்சேரி, சென்னை - 600 042 அவர்கள், கொடுத்த புகார் மனு பின்வருமாறு அனுப்புனர் திரு.N.அறிவழகன், துணை ஆய்வு குழு அலுவலர்/மண்டல துணை வட்டாச்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை-81 .பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு - 1 ஆலந்தூர், சென்னை-16 Proceeding No.98/Inpn/2026 Dated: 03.07.2026 அம்மா, பொருள் : திடீர் கூட்டு ஆய்வு-சென்னை - 600 021, சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-5 அலுவலகத்தில் - திடீர் கூட்டு ஆய்வு மேற்கொண்டது - ரூ.61,330/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக. சென்னை-21, ஆலந்தூர், நகர சிறப்பு பிரிவு-1 காவல் ஆய்வாளர் ஆகிய தங்கள் குழுவினருடன் நான் இணைந்து மேற்கொண்ட திடீர் கூட்டுத் தணிக்கை 03.07.2026 அன்று பிற்பகல் 16.00 மணி முதல் இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி ஆய்வின் போது கணக்கில் வராத தொகை ரூ.61,330/- மற்றும் ஆவணங்கள் ஆகியவை மேல்நடவடிக்கைக்காக தங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் தொடர் நடவடிக்கை குறித்து தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. Enclosure: 1) Original Proceeding, dated:03.07.2026, 2) Cash Rs.61,330/- 3)Seized office files Sd.XXXX (G.N.ராகவி) ஆய்வு குழு ஆய்வாளர்/ குறுவட்ட வருவாய் ஆய்வாளர், வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம். திடீராய்வின் செயல்முறை விவரம் பின்வருமாறு.

செல்வி..G.N.ராகவி, குறுவட்ட வருவாய் ஆய்வாளர், வேளச்சேரி, சென்னை, ஆய்வு குழும ஆய்வாளர் இன்று 03.07.2026 மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகர சிறப்பு பிரிவு-I, திருமதி.K.வளர்மதி காவல் ஆய்வாளர் மற்றும் திருமதி.V.செல்வி, நகர

பிரிவு-1 காவல் ஆய்வாளர், குழுவுடன் இன்று 03.07.2026-ம் தேதி எண்.158, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை-21 என்ற முகவரியில் இயங்கும் மாநகராட்சி அலுவலகம் மண்டலம்-5-ல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்:	(1) செல்வி.G.N.ராகவி, குறுவட்ட வருவாய் ஆய்வாளர் / ஆய்வு குழும ஆய்வாளர் வேளச்சேரி, சென்னை, (2) திருமதி.K.வளர்மதி, காவல் ஆய்வாளர், நகர சிறப்பு பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை - 16. (3) திருமதி.V.செல்வி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை-16.

எண்.158, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை-21 என்ற முகவரியில் இயங்கும் மாநகராட்சி மண்டலம்-5_அலுவலகத்தில், அலுவலகத்திற்கு வரும் தனிநபர்களிடம் வரி கட்டுதல் மற்றும் பிறப்பு, இறப்பு சான்று, குடிநீர் இணைப்பு மற்றும் இதர அரசு அலுவலுக்காக வரும் பொதுமக்களிடம் நேரடியாகவோ அல்லது தரகர்கள் மூலமாகவோ லஞ்சப்பணம் பெறுவதாக நம்பகமான இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி நகராட்சி அலுவலகத்தில் செல்வி.G.N.ராகவி, குறுவட்ட ஆய்வாளர் , வேளச்சேரி, சென்னை/ஆய்வு குழும ஆய்வாளர் தலைமையில், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருமதி.வளர்மதி, காவல் ஆய்வாளர், நகரப் சிறப்பு பிரிவு-I, மற்றும் திருமதி செல்வி. காவல் ஆய்வாளர், நகரபிரிவு-1 பார்டி சகிதம் இணைந்து இன்று (03.07.2026) மாலை சுமா 16.00 மணி முதல் 22.30 மணிவரை இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

கீழ் தளம்:

மேற்படி நகாாட்சி அலுவலகமானது தெற்கு நோக்கி அமைந்துள்ளது. எண்.158, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை-21 என்ற முகவரியில் ராயபுரம்

மாநகராட்சி அலுவலகம் இரண்டு தளங்களுடன் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் கீழ் தளத்தில் இடது பக்கம் 1.பிறப்பு இறப்பு சான்றிதழ் பிரிவு மற்றும் 2.ஆதார் வழங்குதல் மற்றும் புதுபித்தல் பிரிவு, 3. வரி வசூலிக்கும் பிரிவு இயங்கி வருகிறது. அதனை ஒட்டிய பக்கத்து அறையில் 4.தபால் பிரிவு உள்ளது. வலது புறம் அரசியல் மண்டல குழு தலைவர் (Chair Man) அலுவலகம் உள்ளது, விசாரித்தபோது குழும தலைவர் திரு.ஸ்ரீ ராமலு என்பதும், அவர் அலுவலகத்தில் இல்லை என்பதும் தெரியவந்தது. மேலும், கீழ்தளத்தின் நுழைவாயிலின் உட்புறமாக இடது மற்றும் வலது புறங்களில் அமைந்திருக்கும் வருவாய் துறை அலுலகத்தில் பகுதிவாரியாக முதுநிலை வருவாய் அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பகுதியானது 12 ராயபுரம் , 13 துறைமுகம், 14 எழும்பூர் என்றும், வார்டுகள் 49 முதல் 53 வரையில் ராயபுரம் வார்டுகளாகவும், 54 முதல் 57 மற்றும் 60 வரையில் துறைமுக வார்டுகளாகவும், 59 மற்றும் 61 முதல் 63 வரையில் எழும்பூர் வார்டுகளுக்காக வருவாய் துறை அலுவலர்கள் இங்கு பணிபுரிந்து வருகிறார்கள். திடீர் சோதனையின் போது கீழதளத்தில் இருந்த வருவாய்துறை இடது புற அலவலகத்தில் திரு.பாக்கியசெல்வராஜ், முதுநிலை வருவாய் அலுவலர், மற்றும் திரு.S.ரமேஷ், முதுநிலை வருவாய் அலுவலர், திரு.ஸ்டாலின், வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் சோதனையின்போது அலுவலகத்தில் ஆஜரில் இருந்தார்கள்.

சோதனை செய்த போது திரு.ரமேஷ் முதுநிலை வருவாய் அலுவலரின் இருக்கையின் மேஜை டியாரில் ரூ.1000/- காணப்பட்டது மற்றும் அவருடைய மணிபர்சில் ரூ.1,170/- காணப்பட்டது. இத்தொகையை குறித்து ஆய்வு குழு ஆய்வாளர் விசாரித்தபோது தன்னுடைய சொந்த பணம் வைத்திருப்பதாக கூறினார். மேலும், ரூ.1000-ஐ அவரது மருத்துவ செலவிற்கு அப்பொழுது தான் மேஜை டிராயரில் எடுத்து வைத்ததாக ஆய்வு குழு ஆய்வாளர் அவரே காண்பித்த காரணத்தினால் ஆய்வு குழு ஆய்வாளரால் அந்த பணம் ரூ.2170/- அவரிடம் திரும்ப ஒப்புவிக்கப்பட்டது.

மேலும், முதுநிலை வருவாய் அலுவலர்களான திரு.பாக்கியசெல்வராஜ் அவரிடத்தில் ரூ.1000/- காணப்பட்டது. ஆய்வு குழு ஆய்வாளரால் அந்த பணத்தை பற்றி விசாரித்தபோது அது தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். அது அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது.

திரு.ஸ்டாலின் வரி மதிப்பீட்டாளரை சோதனையின்போது அவரிடத்தில் ரூ.1000/- காணப்பட்டது ஆய்வு குழு ஆய்வாளரால் அந்த பணத்தை பற்றி விசாரித்தபோது அது தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். அது அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.சையது ஜலானி, உரிமம் ஆய்வாளர் அவர்கள் Pink நிற Pouch -ல் Revenue Officer Coporation of Chennai என்கிற பெயரில் 4 காசோலைகள் வெவ்வேறு வங்கிகளுக்கு அளித்ததை அந்த Pink நிற Pouch -ல் வைத்திருந்தார். அதனுடன் ரூ,3000/ மும் இருந்தது இது குறித்து ஆய்வு குழு ஆய்வாளர் விசாரித்த போது தனது சொந்த பணம் மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாக கூறினார். அவர் கூறிய விளக்கத்தில் போதிய உண்மை தன்மை இல்லை என்று ஆய்வு குழு ஆய்வாளர்

விசாரணைக்காக கைப்பற்றினார். மேலும், அவர் வைத்திருந்த Pink நிற Pouch -ல் காணப்பட்ட காசோலைகளையும் விசாரணைக்காக கைப்பற்றினார்.

அதை தவிர வருவாய் துறை வலது புறமாக இருந்த அலுவலகத்தில் வரி மதிப்பீட்டாளர் திரு.T.வெற்றிவேல் இருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய் 5500 ATM -ல் இருந்து எடுத்த தொகை வைத்திருப்பதாக கூறினார். ஆனால், அவரை சோதனை செய்தபோது தனியாக ரூ.730/- இருந்தது மொத்தமாக அவரிடம் ரூ.6,230/- காணப்பட்டது. அவரை விசாரித்த ஆய்வு குழும ஆய்வாளர் அவர் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததால் அந்த பணத்தை ஆய்வு குழு ஆய்வாளரால் கைப்பற்றினார்.

அதனை தொடர்ந்து பகுதி 13 துறைமுகம் பார்க்கும் முதுநிலை வருவாய் அலுவலர் அலுவலகத்தில் இல்லை. அவரை பற்றி ஆஜரில் இருந்த Data Entry Operators அவர்களிடம் விசாரித்தபோது அவர் வெளி அலுவலாக சென்றிருப்பதாக தெரிவித்தார். மாலை அலுவலகம் திரும்புவார் என்றும் தெரிவித்தார்கள். ஆனால், சோதனை குழு அலுவலர்கள் மற்றொரு அலுவலக அறையில் சோதனை மேற்கொண்டிருந்தபோது திரு. பாலசுப்பிரமணி முதுநிலை வருவாய் அலுவலர் அலுவலகம் வந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்கள் திடீர் சோதனைக்காக வந்திருக்கும் தகவலை அறிந்து தன்னுடைய கைப்பையை எடுத்துக்கொண்டு ரகசியமாக அலுவலகத்தை விட்டு வெளியே சென்றிருப்பது தெரியவந்தது. பின்பு அவர் அலுவலகத்தில் பணிபுரியும் ராசேஷ் என்பவர் தகவல் கொடுத்ததின் பேரில் மாலை சுமார் 7.00 மணிக்கு அலுவலகம் வந்தார். தான் தனது தலைமை அலுவலகத்திற்கு சென்று வந்ததாக கடிதம் கொடுத்தார். பின்னர், அவரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், அவரிடம் ரூ.690 இருப்பது கண்டறியப்பட்டு, அப்பணமானது அவர் சொந்த செலவிற்காக கூறியதன் பெயரில் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. மேலும், வருவாய் துறை அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலக உதவியாளர் திரு. பாண்டியன் என்பவரை விசாரித்தபோது அவர் தன் சொந்த பணம் ரூ.390/- வைத்திருப்பதாக கூறினார் விசாரணைக்கு பின்பு அப்பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சோதனையின் போது மற்ற இரண்டு தளத்திலும் மேற்கொண்ட சோதனையின் விவரங்கள் பின்வருமாறு.

<u>முதல் தளம்</u>

முதல் தளத்தில் வலது புறத்தில் மின்சாரம்/நிர்வாக பிரிவு, அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்தில் சோதனை செய்த போது, அங்கு அலுவலர்கள் பணியில் இருந்தார்கள். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த ஒருவரை சோதனை செய்த போது அவரிடமிருந்து ரூ.42,100/- கைப்பற்றப்பட்டது. அவர் தன் பெயர் பாபு என்றும் தான் காண்ட்ராக்டர் தொழில் செய்து வருவதாகவும், இன்று பணி செய்யும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க இப்பணத்தினை எடுத்து வந்ததாகவும் கூறினார். ஆனால், அவர் தன்னுடைய கட்டுமான பணியை முடித்து அதற்கான தொகை இன்னும் பெற்று தரவில்லை என்பதால் அவருக்கு ஒப்புதல் அளித்து பணத்தை பெற்று தருவதற்காக M-BOOK குறித்து தெரிந்து கொள்ள வந்திருப்பதாக கூறினார். ஆனால் அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த திரு.மோகன்

குமார், கண்காணிப்பாளர், நிர்வாக பிரிவு அவர்கள் அவர் கேட்கும் M-BOOK இன்னும் வரவில்லை என்று கூறினார். எனவே, ஆய்வு குழு ஆய்வாளர் காண்ட்ராக்டர் கூறிய விளக்கத்தில் போதிய உண்மை தன்மை இல்லை என்பதை அறிந்து அவர் வைத்திருக்கும் பணம் லஞ்ச பணம் கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்கலாம் என்னும் சந்தேகத்தின் பேரில் அந்த பணத்தினை கைப்பற்றினார்.

மேலும், இந்த அலுவலகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கை மேற்கொண்டபோது கீழ்கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தனர்.

S.No.	Name, Designation and Address	S.No.	Name, Designation and Address
1.	திரு.J.வெங்கடேசன், நிர்வாக அலுவலர்,	21	திரு.பிரபு இளநிலை உதவியாளர்.
2.	திரு.M.மோகன் குமார், மேலாளர்,	22	திரு. கார்த்திக், தட்டச்சர்.
3.	திரு.P.S.கார்த்திகேயன், கண்காணிப்பாளர்.	23	திரு. பாலநீலமலை முருகன் பகுதி அலுவலர்,
4.	திரு.P.கிருஷ்ணமூர்த்தி, மேலாளர்	24	திரு.பிரபு பகுதி அலுவலர்
5.	திரு.விஜயபாஸ்கர், மேலாளர்,	25	திரு.இளங்கோவன், அலுவலக உதவியாளர்,
6.	திருமதி. அபிதா பேகம் மேலாளர்.	26	திரு.ஜானி, அலுவலக உதவியாளர்,
7.	திருமதி. கல்பனா உதவியாளர்	27	திரு.கண்ணன், அலுவலக உதவியாளர்,
8.	திருமதி.N.C.குமார், உதவியாளர்	28	திரு. நீலகண்டன், அலுவலக உதவியாளர்,
9.	திரு.ராஜ்குமார், உதவியாளர்	29	திரு.மாதவன், அலுவலக உதவியாளர்,
10.	திரு.K.உமா, உதவியாளர்	30	திரு.வீரராகவன், அலுவலக உதவியாளர்,
11.	திருமதி.J. அபிராமி உதவியாளர்.	31	திரு.யோசனி அலுவலக உதவியாளர்,
12.	திருமதி.P.M.கலைவாணி உதவியாளர்,	32	திருமதி. குணசுந்தரி, அலுவலக உதவியாளர்,
13.	திரு.J.சதிஷ்குமார் உதவியாளர்	33	திருமதி.நாகபூஷனம், அலுவலக உதவியாளர்,

14.	திரு.S.ரகுராமன் உதவியாளர்	34	திரு. முரளி, அலுவலக உதவியாளர்,
15.	திரு.A.முரளி. உதவியாளர்	35	திருமதி.தேவி அலுவலக உதவியாளர்,
16.	திரு.தயாளன், உதவியாளர்	36	திருமதி. விஜயலட்சுமி, அலுவலக உதவியாளர்,
17.	திருமதி.D.ராணியம்மாள்., இளநிலை உதவியாளர்	37	திரு. மகேந்திரன், அலுவலக உதவியாளர்,
18.	திருமதி.M.ஜெயகுமாரி இளநிலை உதவியாளர்.		
19.	திரு. ஷென்றி தாமஸ் இளநிலை உதவியாளர்.		
20.	திரு.அனேக் இளநிலை உதவியாளர்.		

மேற்கண்ட அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை சோதனை செய்த போது அவர்களிடத்தில் சந்தேகத்திற்கு இடமான எந்த பணமோ பொருளோ காணப்பட.வில்லை. மேலும், அவர்கள் வைத்திருந்த சொந்த பணத்தை குறித்து விசாரித்து அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், இந்த அலுவலகத்தில் பண கையிருப்பு பதிவேடு எதுவும் பராமரிக்கப்படவில்லை என்று விசாரணையின் போது தெரியவந்தது. அதை குறித்து ஆய்வு குழு ஆய்வாளர், அலுவலர்களுக்கான பண கையிருப்பு பதிவேட்டை உடனடியாக போட வேண்டும் என்பதை மேலாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து இடது புறமாக இருந்த உதவி ஆணையாளர் அலுவலகம் மண்டலம்5-ல் சோதனை செய்தபோது அங்கு மாவட்ட வருவாய் அலுவலராக உள்ள திரு.விஜய் பாபு 15 நாட்களாக மருத்துவ விடுப்பில் இருந்து வந்தது தெரியவந்தது. அவர் கீழ் பணிபுரியும் செயற்பொறியாளர் திரு.பழனி என்பவர் அலுவலகத்தில் இல்லை. மற்ற அலுவலர்களை சோதனை செய்த போது சந்தேகத்திற்கு இடமான பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை.

அதனை தொடர்ந்து முதல் தளத்திலேயே வலது புறமாக Confernce Hall ஒன்றும் வடக்கு வட்டார துணை ஆணையர் அலுவலகம் உள்ளது. அதில் அலுவலக உதவியாளர் ஆஜரில் இருந்தார். அவரை விசாரித்த போது வட்டார துணை ஆணையாளர் பதவி காலியாக உள்ளது என்று தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து இடது புறமாக Superintent Engineer Reginal Office North உள்ளது. இங்க பணிபுரியும் அலுவலர்களை சோதனைசெய்தபோது அவர்களிடத்திலும் எந்த

பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து இரண்டாம் தளத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் தளத்தில் சோதனையின்போது காணப்பட்ட விவரங்கள் பின்வருமாறு,

இரண்டாம் தளம்:

இரண்டாம் தளத்தில் வலது புறத்தில் Accounting Team சுகாதார ஆய்வாளர் அறை Regional integrated Command and Control Room மற்றும் Confrance Hall உள்ளது. சுகாதார ஆய்வாளர் அறையை சோதனை செய்த போது அங்கு ஆஜரில் இருந்த திரு.பிரசாத் குமார், சுகாதார ஆய்வாளர், மண்டலம்-5, கோட்டம் 50 மற்றும் 53 என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. அந்த பணம் சந்தேகத்திற்கு இடமாக இருந்ததால் அவர் கூறிய விளக்கத்தில் உண்மை தன்மை இல்லை என்பதை அறிந்து அவர் வைத்திருந்த மொத்த பணம் ரூ.10,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து இடது புறமாக இருந்த சுகாதார அலுவலகத்தினை சோதனை செய்யப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கு இடமான பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. அதன் பக்கத்தில் இருந்த Command Control Centre உள்ளது. அந்த அறையில் தனியார் அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும் இந்த சோதனையின்போது ராயபுரம் மாநகராட்சி அலுவலகத்திலிருந்த கீழ்கண்ட ஆவணங்கள் செல்வி.G.N.ராகவி, குறுவட்ட ஆய்வாளர், வேளச்சேரி, சென்னை/ ஆய்வு குழும ஆய்வாளர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டது.

வ.எண்.	ஆவணங்களின் விவரம்
1	மின்சாரம்/நிர்வாக பிரிவு, DRO / Zonal Office (மண்டலம் 5) அலுவலக வருகை பதிவேடு
2	ராயபுரம் மாநகராட்சி வருவாய் துறை அலுவலக வருகை பதிவேடு
3	ம.அ/5.வது.ந.க.எண்.ஆர்1/2040/2026 பெருநகர சென்னை மாநகராட்சி, ஊதவி ஆணையர் நிலை (1) (மண்டலம்) மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை. நாள்: 10.06.2026.
4	Pink நிற Pouch, Union Bank Cheque No.192949, Indian Overseas Bank Cheque No.751523 & 920357, Kotak Mahendra Bank cheque No: 000611, State Bank of India Cheque No.565657.
5	Property Tax Collection report

6	ம.அ/5வ.து.ந.க.எண். ஆர்1/1144/2026 நாள்:03.07.2026
7	துப்புறவு ஆய்வாளர்களின் வருகை பதிவேடு
8	Regional Deputy Commissioner (North Office), Staff Details.
9	வடக்கு வட்டார அலுவலகம் தகவல் தொழில்நுட்ப பிரிவு வருகை பதிவேடு
10	வடக்கு வட்டார அலுவலகம் மூன்றாம் நிலை பணியாளர்களின் வருகை பதிவேடு
11	வடக்கு வட்டார அலுவலகம் நான்காம் நிலை மாற்று பணியாளர்களின் வருகை பதிவேடு
12	கைப்பற்றப்பட்ட பணத்திற்காக அரசு அலுவலர்கள் மற்றும் தனிநபரிட.மிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள்.

இரு துறை கூட்டு தணிக்கையின் போது மேற்கூறிய எந்த அலுவலக நிர்வாகத்திலும் அலுவலர்கள் சொந்த பண இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்பது விசாரணையின்போது தெரியவந்தது. மேலும், மண்டலம் 5-ல் உள்ள அலுவலகங்களில் தனியார் நியமிக்கப்பட்ட ஆண் பெண் அமைச்சுப்பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் NUML & Jayaram Assosiation மூலம் நியமிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு சென்னை மாநகராட்சி மூலமாக தொகுப்பு ஊதியம் பெற்று வருகிறது தெரியவருகிறது. இரண்டாம் தளத்தில் இயங்கும் தளத்தில் இயங்கம் Health Section டாக்டர்.சுப்ரியா அவர்கள் சுகாதார அலுவலகத்தில் இல்லை.

இரு துறை கூட்டு தணிக்கையின் போது மொத்தம் ரூ.61,330/- (500 x 119, 200 x 3, 100 x 9, 50 x 4, 20 x 5, 10 x 3)விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (03.07.2026) சுமார் 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது.

Sd/xxx
செல்வி.G.N.ராகவி,
குறுவட்ட வருவாய் ஆய்வாளர்,
(ஆய்வு குழும ஆய்வாளர்)
வேளச்சேரி, சென்னை-42,

Sd/xxx
திருமதி.K வளர்மதி,
காவல் ஆய்வாளர்,
நகர சிறப்பு பிரிவு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

Sd/xxx
திருமதி.V.செல்வி,
காவல் ஆய்வாளர்.
சென்னை நகர பிரிவு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

Sd/xxx
திரு.ரமேஷ்
முதுநிலை வருவாய் அலுவலர்,
ராயபுரம் மாநகராட்சி(மண்டலம்-5)
சென்னை-21.

Sd/xxx
திரு.பாக்கிய செல்வராஜ்,
முதுநிலை வருவாய் அலுவலர்,
ராயபுரம் மாநகராட்சி(மண்டலம்-5)
சென்னை-21,

Tr.S.K.Syed Jeelani,
Licence Inspector,
Revenue Department,
Zone 5, Chennai-21
Sd/xxx

Tr.Vetrivel,
Assessor,
Revenue Department,
Zone 5, Chennai-21
Sd/xxx

Tr.G.Prasath Kumar,
Sanitary Inspector,
Zone 5, Health Department,
Chennai-21.
Sd/xxx

Tr.S.Babu, Contractor,
(Private Individual),
36/48 Thandavarayan Street,
Washermanpet, Chennai-21.
Sd/xxx

Honoured sir received the above complaint on 03.07.2026 at 22.45 hrs. A discrete enquiry was caused against 1) Tr.S.K.Syed Jeelani, Licence Inspector, Revenue Department, Zone 5, Chennai-21. 2) Tr.Vetrivel, Assessor, Revenue Department, Zone 5, Chennai-21. 3) Tr.G.Prasath Kumar, Sanitary Inspector, Zone 5, Health Department, Chennai-21. 4) Tr.S.Babu, Contractor, (Private Individual), 36/48 Thandavarayan Street, Washermanpet, Chennai-21 and confirmed about the corrupt activities. After getting oral orders from superior offiers today 06.07.2026 a case in Cr.No.04/2026/AC/CC-I u/s 7 and 8 of Prevention of corruption Act 1988 (Amended) Act 2018 was registered in CSU-I Datachment at 12.45 hrs and took up investigation. The orginal FIR along with the

1. Complaint vide Proceeding No.98/Inspn/2026 Dated.03.07.2026
2. Proceeding drawn by Tr.G.N.Ragavi, Inspection Cell Officer during joint surprise check on 03.07.2026 between 16.00 hrs to 22.30 hrs.
3. Orginal Tamil Statements of
   i) Tr.S.K.Syed Jeelani.
   ii) Tr.Vetrivel.
   iii) Tr.G.Prasath Kumar
   iv) Tr.S.Babu
4. An unaccounted cash of Rs.61,330/- seized during the joint surprise check is submitted to the Hon'ble Principal Judge, City Civil & Sessions Court, Chennai.

06/07/26

(K.Valarmathi)
Inspector of Police,
City Special Unit-I,
Vigilance and Anti Corruption,
Chennai-16.